கோயமுத்தூர் முதன்மை மாவட்ட நீதிமன்றம், கோயம்புத்தூர்

**SOP.No.189/2018**

PW.1

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 23- ஆம் நாள் வியாழக்கிழமை 1989 ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின்) திரு. ஆர்.சக்திவேல், பி.ஏ., பி. எல்., முதன்மை மாவட்ட நீதிபதி, கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது)

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நவீன்குமார்.பி.ஆர். | ஜாதி | |
| தகப்பனார் / கணவர் பெயர் | | சமயம் | |
| கிராமம் | | வயது | |
| தாலூக்கா | | தொழில் | |

முதல் விசாரணை

நான் இம்மனுவில் 3 ஆம் மனுதாரர் ஆவேன். 1 ஆம் மனுதாரர் எனது பாட்டியாவார்., 2 ஆம் மனுதாரர் என்னுடைய சித்தி ஆவார். 4 ஆம் மனுதாரர் என்னுடைய தங்கை ஆவார். நான் மனுதாரர்களுக்காக ம.சா.1 ஆக என்னை விசாரித்துக் கொள்கிறேன். எனது தரப்பு சாட்சியத்திற்கு சத்தியப்பிரமாணம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். 1,2 எதிர்மனுதாரர்கள் என்னுடைய தாய் மாமன்கள் ஆவார்கள். (இந்நிலையில் 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையாகும் கற்றறிந்த வழக்கறிஞர் மூத்த வழக்கறிஞர் திரு.ராதாரமணன் உடல்நிலை சரியில்லாததால் இன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை என்றும், ஆவணங்களை குறியீடு செய்வதில் சில ஆட்சேபணைகள் இருப்பதாகவும், ஆவணங்களை குறியீடு செய்யும் சமயத்தில் 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தரப்பில் முன்னிலையாகும் மூத்த வழக்கறிஞரின் முன்னிலை மிகவும் அவசியம் என்று தெரிவிக்கிறார். 1 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு வேண்டலின்பேரல் ஆவணங்களை குறியீடு செய்ய என மனு 04-10-2021 ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)

ஒம்/நவீன்குமார்.பி.ஆர்.

ஒம்/ஆர்.சக்திவேல்,<br>முதன்மை மாவட்ட நீதிபதி,<br>கோயமுத்தூர்.